

பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு திருவாரூர் மாவட்டத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.08.2023) காலை நடைபயிற்சி மேற்கொண்டார்.



பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு திருவாரூர் மாவட்டத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.08.2023) காலை நடைப் பயிற்சி மேற்கொண்டு, பொதுமக்கள் மற்றும் சிறுவர்களுடன் கலந்துரையாடினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.08.2023) திருச்சிராப்பள்ளி விமான நிலையத்தில், கடந்த 30.7.2023 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரிஸ்டோ இரயில்வே மேம்பாலத்தில் இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, சாலை விபத்து ஏற்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்த தலைமைக் காவலர் ஸ்ரீதர் அவர்களின் குடும்பத்தினருக்கு ரூபாய் 25 இலட்சம் நிவாரண நிதிக்கான காசோலையை வழங்கி ஆறுதல் கூறினார். உடன் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.பிரதீப் குமார். திருச்சிராப்பள்ளி மாநகர காவல் துறை ஆணையர் திருமதி என்.காமினி ஆகியோர் உள்ளனர்.

### திருச்சி மாவட்டத்தில் – ரோந்துப் பணியின்போது சாலை விபத்தில் உயிரிழந்த

# தலைமைக் காவலர் குடும்பத்திற்கு - ரூ.25 இலட்சம் நிவாரண நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

திருச்சி, ஆக. 29 -

திருச்சி மாவட்டத்தில் ரோந்துப் பணியின் போது ஏற்பட்ட சாலைவிபத்தில் உயிரிழந்த தலைமைக் காவலரின் குடும்பத்தினருக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ரூபாய் 25 இலட்சம் நிவாரண நிதிக்கான காசோலையை நேற்று முன்தினம் (27.08.2023) வழங்கினார்.

அதன் விபரம் வருமாறு:-

திருச்சி மாநகர், அரியமங்கலம் போக்குவரத்து ஒழுங்குப் பிரிவில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வந்த ஸ்ரீதர் (வயது 45) கடந்த 307 2023 அன்று அரிஸ்டோ இரயில்வே மேம்பாலத்தில் இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது அவ்வழியாக வந்த கார் ஒன்று மோதியதில் காயமுற்று அருகிலுள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து, தலைமைக் காவலர் ஸ்ரீதர் குடும்பத்தினருக்கு 25 இலட்சம் ரூபாய்க்கான நிவாரண நிதி வழங்க உத்தரவிட்டிருந்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ், ஆய்வுப் பணிகளை முடித்துக் கொண்டு, சென்னை திரும்பும் வழியில், நேற்று (27.08.2023) திருச்சி விமான நிலையத்தில், ரூபாய் 25 இலட்சம் நிவாரண நிதிக்கான காசோலையை மறைந்த தலைமைக் காவலர் ஸ்ரீதரின் குடும்பத்தினரிடம் வழங்கி ஆறுதல் கூறினார்.

இந்நிகழ்வின்போது, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் எம். பிரதீப்குமார், திருச்சிராப்பள்ளி மாநகர காவல் துறை ஆணையர் திருமதி என். காமினி, ஆகியோர் உடனிருந்தனர்.

### தேசிய நல்லாசிரியர் விருது!

# தமிழ்நாட்டில் இருந்து தேர்வாகியுள்ள ஆசிரியர்களுக்கு நெஞ்சார்ந்த வாழ்த்துகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, ஆக.29-**

**தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தேர்வாகியுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த இரு ஆசிரியர்களுக்கு தமது நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**தமிழ்நாட்டில் இருந்து தேசிய நல்லாசிரியர் விருதுக்குத் தேர்வாகியுள்ள மதுரை, அலங்காநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் காட்வின் வேதநாயகம் ராஜ்குமார் மற்றும் தென்காசி, வீரகேரளம்புதூர் அரசு மேல்நிலைப்பள்ளி ஆசிரியை மாலதி ஆகிய இருவருக்கும் எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகள்!**



**கல்வித்துறையில் தமிழ்நாடு செய்து வரும் சாதனைகளுக்கு ஆசிரியர்களே அடித்தளம்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப் பிட்டுள்ளார்.

### கோவை – அனுவாவி

# சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு ரூ.14. 57 கோடி மதிப்பீட்டில் கம்பிவட ஊர்தி!

## இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

கோவை, ஆக. 29 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (27.08.2023) கோயம்புத்தூர் மாவட்டம், அனுவாவி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ. 14.57 கோடி மதிப்பீட்டில் கம்பிவட ஊர்தி அமைக்கும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், அமைச்சர் பி. கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசானது திருக்கோயில் களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தந்து வருகிறது. குறிப்பாக, பக்தர்கள், முதியோர்கள் மற்றும் உடல் உபாதைகள் உள்ளவர்கள் மலைக் கோயில்களுக்கு செல்ல வசதியாக ரோப் கார் மற்றும் தானியங்கி லிப்ட் வசதியை ஏற்படுத்தி தர வேண்டும் என்ற தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தர விற்கிணங்க, 560 படிகள் கொண்ட



அனுவாவி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயி லுக்கு கம்பி வட ஊர்தி அமைப்பது தொடர்பான ஆய்வினை மேற்கொண்டோம். அதனடிப்படையில் இந்த திருக்கோவிலுக்கு 460 மீட்டர் அளவுள்ள ரோப் கார் வசதியை ஏற்படுத்தி தர தமிழ்நாடு தொழில் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை நிறுவனத்தின் (ITCOT) மூலம் சாத்திய கூறுகள் ஆராயப்பட்டு, வடிவமைப்பு உருவாக்கப்பட்டு வருகிறது, இது குறித்த முழுமையான அறிக்கை பெறப்பட்டவுடன் ரோப் கார் வசதி ஏற்படுத்தித் தரப்படும்.

மேலும், திருக்கழுக்குன்றம், திருநீர்மலை, இடும்பன் மலை, திருப்பரங்குன்றத்தில் அமைந்திருக்கின்ற காசி விஸ்வநாதர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கும் ரோப் கார் வசதி ஏற்படுத்தி தர ஏற்கனவே பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கரூர், அய்யர் மலை திருக்கோயில், சோளிங்கர் நரசிம்ம சுவாமி திருக்கோயில் ஆகியவற்றிக்கு ரோப் கார் அமைக்கும் பணிகள் முடுக்கி விடப்பட்டு வெகு விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட உள்ளன.

அதேபோல் மருதமலை மற்றும் சுவாமிமலை திருக்கோயில்களுக்கு தானியங்கி மின்தூக்கி (Lift) அமைப்பதற்குண்டான சாத்திய கூறுகள் ஆராயப்பட்டு, மருதமலையில் ரூ. 5.20 கோடி மதிப்பீட்டில் தானியங்கி லிப்ட் அமைக்கும் பணி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சுவாமிமலையில் மின்தூக்கி அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக ஆய்வு குழுவினர் அறிக்கை அளித்துள்ளனர். ஆகவே சுவாமிமலை திருக்கோயிலுக்கு சுமார் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் தானியங்கி லிப்ட் அமைக்கப்படும். இது போன்று மலைக் கோயில்களுக்கு தேவைப்படுகின்ற அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து தருவதற்கு துறை அலுவலர்கள் உரிய ஆய்வுகளை மேற்கொண்டு செயல்படுத்தி வருகின்றோம். இந்த திராவிட மாடல் ஆட்சியைப் பொருத்தளவில் வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு இரண்டு ஆண்டுகளில் 922 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. அதேபோல் ரூ.5,135 கோடி மதிப்பிலான 5,593 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. ஆகவே இந்த ஆட்சியானது இறையன்பர்களுக்கும், இறைப் பற்று கொண்டவர்களுக்கும் மகிழ்ச்சியான ஆட்சியாகத் திகழ்கிறது.

திருக்கோயில்களில் பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை தொடர்ந்து நிறை வேற்றித் தரும் வகையில் இந்து சமய அறநிலையத் துறை செயல்படும். அனுவாவி திருக்கோயிலுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, கழிப்பிட வசதி போன்ற ஒருங்கிணைந்த வசதிகளுடன் ரோப் கார் விரைவில் ஏற்படுத்தித் தரப்படும். இந்த பகுதியில் யானைகள் நடமாட்டம் இருப்பதாகவும், பாதுகாப்பு மின்வேலி அமைக்கப்படுமா என செய்தியாளர்கள் கோரியுள்ளனர். அவசியம் தேவைப்படுமாயின் சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு, அதனை செய்வதற்குண்டான முயற்சிகளை மேற்கொள்வோம்.

இவ்வாறு அமைச்சர் பி. கே. சேகர்பாபு தெரிவித்தார்.

பின்னர், அவர் கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் ஆதீன வளாகத்தில் நடைபெற்ற அகில பாரதீய சந்நியாசிகள் சங்கம் ஒருங்கிணைத்த நொய்யல் பெருவிழாவில் கலந்து கொண்டு, போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ் களையும், நலத்திட்ட உதவிகளையும் வழங்கி விழாப் பேருரையாற்றினார். அதனைத் தொடர்ந்து தண்டு மாரியம்மன் திருக்கோயில் மற்றும் லட்சுமி நரசிம்மர் சுவாமி திருக்கோயில் களுக்கு சென்று அங்கு நடைபெற்று வரும் திருப்பணிகளையும் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா.கார்த்திக், தொ.அ.ரவி, இணை ஆணையர் பெ.ரமேஷ், துணை ஆணையர் எஸ்.வி. ஹர்சினி, உதவி ஆணையர்கள் சி.கருணாநிதி, ஆர். விஜயலட்சுமி, திருமதி கே.விமலா, திருக்கோயில் செயல் அலுவலர் பிரபாகர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முனைவர் நா.சந்திரபாபு தொடக்கவுரை! பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் சார்பில்

# தளபதி மு.க.ஸ்டாலினின் 'உங்களில் ஒருவன்' நூல் கருத்தரங்கம்!

## தஞ்சை கூத்தரசன் தொடர் சொற்பொழிவாற்றுகிறார்!

சென்னை, ஆக. 29-

தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 'உங்களில் ஒருவன்' நூல் குறித்து தஞ்சை, கூத்தரசன் தொடர் சொற்பொழிவாற்றுகிறார். முனைவர் நா.சந்திரபாபு தொடக்கவுரை நிகழ்த்து கிறார்.

இதுகுறித்து பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் தலைவர் வழக்கறிஞர் திருமதி.ஆ.வீரமர்த்தினி தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

சுழலுகின்ற பூமிப்பந்தில் சுடர்விட்ட பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் அறிவுப் பாசறையான திராவிடர் கழகத்தின் துணை அமைப்புகளில் ஒன்றான பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் சார்பில், 31.8.2023, வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில், சென்னை, தந்தை பெரியார் திடலில் அமைந்துள்ள அன்னை திருமதி ஈ.வெ.ரா.மணியம்மையார் அரங்கில் என் (ஆ.வீரமர்த்தினி) தலைமையில் நிகழ்ச்சி ஒன்று நடைபெறுகிறது.

அதில் தி.மு.க. தலைமை இலக்கிய அணிப் புரவலர் தஞ்சை கூத்தரசன், தமிழக முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் எழுதிய "உங்களில் ஒருவன்" எனும் நூல் குறித்து ஒன்பதாவது தொடர்சொற்பொழிவை ஆற்றுகிறார். தி.மு.க. தலைமை இலக்கிய அணிப் பொருளாளர் முனைவர் நா.சந்திரபாபு தொடக்க உரை நிகழ்த்துகிறார்.

இந்நிகழ்வுக்கு பெரியார் நூலக வாசகர் வட்ட நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன், தென். மாறன், வழக்கறிஞர் மணியம்மை, ஜெனார்த்தனம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். அனைவரும் வரவேண்டுமென வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் தன் அறிக்கையில் கூறியுள்ளார்.



முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கிருஷ்ணகிரியில் தட நீடிப்பு நகர பேருந்துகளை நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் கே.என்.நேரு, உணவு மற்றும் உணவு பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர். காந்தி ஆகியோர் கொடி அசைத்து துவக்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ், மாவட்ட ஆட்சியர் சரயு, மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணிச் செயலாளர் டி. செங்குட்டுவன், சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினர் இ.ஜி.சுகவனம், தர்மபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் தடங்கம். சுப்பிரமணி, ஓசூர் மாநகர மேயர் சத்யா, தர்மபுரி மண்டல பொது மேலாளர் செல்வம், தர்மபுரி வணிக மேலாளர் ராஜராஜன், கிருஷ்ணகிரி கோட்ட மேலாளர் தமிழரசன், கிருஷ்ணகிரி புறநகர் கிளை மேலாளர் இளங்கோவன், தொ.மு.ச. பி.கிருஷ்ணன், கிருஷ்ணகிரி நகர் மன்ற தலைவர் பரிதா நவாப் மற்றும் அரசு அதிகாரிகள், கழக உடன்பிறப்புகள் உட்பட ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.





திருக்கோயிலூர் சட்டமன்றத் தொகுதி, திருக்கோயிலூர் கிழக்கு ஒன்றியம், விளந்தை கிராமத்தில் உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி விளையாட்டு மைதானத்தை திறந்து வைத்து விளையாட்டு வீரர்களுடன் வாலிபால் விளையாடி அசத்தினார். மாவட்ட ஊராட்சிக் குழு துணைத் தலைவர் மு. தங்கம் வரவேற்புரையாற்றினார். விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் சரவணக்குமார், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா. இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் டி.என். முருகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ், ஒன்றியச் செயலாளர்கள் ஜி. இரவிச்சந்திரன், அ.சா.ஏ. பிரபு, பி.வி.ஆர். விசுவநாதன், நகரச் செயலாளர்கள் கோபி கிருஷ்ணன், துணைத் தலைவர் மணிவண்ணன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் இராஜிவ்காந்தி, நகர துணைத் தலைவர் குணா, ஊராட்சி மன்றத் தலைவர், கழக நிர்வாகிகள் மற்றும் அரசுத் துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.